Koviloor Digital Library

உ

சிவமயம்.

கணபதிதுணை.

3238
KMM0953

பினாங்கு,

தண்ணீர்மலை

வடிவேலர்பேரிற் றுதிகவி.

மதுரைஜில்லா, கூத்தளூர்,
ரா. ம. வேங்கடாசலச் செட்டியாரவர்கள் குமாரரும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ-அ. வன்றெண்டச் செட்டியா
ரவர்கள் மாணாக்கருளொருவருமாகிய
இராமநாதச் செட்டியாரவர்கள்,
இயற்றியது.

இஃது.
பினாங்கில்வசிக்கின்ற,
நாட்டுக்கோட்டை நகரத்தாரால்,
பினாங்கு,
"பினாங் அன்ட் ஸ்டெரெயிட்ஸ் பிரஸ்,"
அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

விஜய-ஹு மார்கழி-மீ
1894.

Koviloor Digital Library

608
அ/39

உ

சாற்றுகவி.

கண்டமாணிக்கம்

மெய்யப்பச்செட்டியாரவர்கள் குமாரர்,

மெய்யப்பச் செட்டியார்

இயற்றியது.

வண்டமிழாற்றண்ணீர்மலைவேலன்றிண்புயத்திற்
கொண்டருளப்பாமாலைகூறினான்—றண்டமிழின்
சீராரும்வன்றொண்டதேசிகர்பாற்கற்றுணர்ந்த
மாராமநாதனெனுமால்.

தண்ணீர்மலைவேலன்றன்புகழைத்தண்டமிழா
லுண்ணீரமுதமெனவோதினான்—மண்ணோருண்
மிக்காரியாரும்விரும்புபுகழ்மேற்கொண்ட
தக்கோனிராமனாதன்.

—

Koviloor Digital Library

உ

சிவமயம்.

கணபதி துணை.

பினாங்கு,

தண்ணீர்மலை வடிவேலர்பேரிற் றுதிகவி.

காப்பு.

புந்திக்குளெண்ணியிந்தப் பூலோப்பினாங்கிலுள்ளார்
வந்திக்குந்தண்ணீர்மலைக்குகனைச்—சிந்தித்துப்
பாமாலைசூட்டப்பரூஉத்தடக் கைத்தந்திமுகக்
கோமானைநெஞ்சேகுறி.

அவையடக்கம்.

பாலொடுகலந்தநீரும் பனிமலர்முடிந்தநாருந்
தாலமீதெவருந்தள்ளாத் தன்மையிற்றண்ணீர்வெற்பின்
வேலன்மெய்ப்புகழைப்பாடு மேன்மையாலென்புன்சொல்லுஞ்
சாலநன்றென்றேகொள்வர் தமிழறிந்துணர்ந்ததக்கோர்.

சந்தக்கவி.

திருமருவுமுழுமதியமென்றுலதிற்சிறிது மறுவுளதுமட லவிழும்வண்டாமரைப்புதிய, செழுமலரை நிகரெனிலினன் சாய்வுறக்குவியு-மதனாலே-தெரியிலிவர்வதனமுயர்வென்றே குறித்தியவி,னழகமையுமடவியர்கடங்காதலுற்றவர்கள்,செறி மனையினிடைதனியடைந் தேவன்முற்றிமதன்-வலியாலே-கரு கியழலிழுதெனவு மஞ்சாரிடிக்குளயர், பணியெனவுமரிவாவு கண்டேவெருக்கொண்மத,கரியெனவுமனமறுகிநொந்தேசவி த்துநித-முழலாதே-கனியிதழினமுதுதவிவிந்தாசலத்தைநிக ரிணைமுலையின்மிசையணை சுகந்தானளித்தல்பர, கதியுதவுநெ றியென வறைந்தாவலுற்றலையு-மெனையாள்வா-யருமறைகள றிவரிய கங்காதரக்கடவு, ளிமையமலைமகள்வலிய சண்டா

Koviloor Digital Library

சுரப்பதக, னழியவமர்பொருகவுரி பங்காளன்மெச்சவருள் குருநாதா-வயனையொருபொருள்வினவி யன்றேபிணித்தரிய, சிறையிலிடுகுககுமர கந்தாநிரைக்கழுவி, லமணர்குழுவிழவ மூதி தன்கூனிமிர்க்கவரு-முரவோனே-பொருகடலுமசுரர்களு நொந்தேதிகைக்கமுனை, யயிலெறியுமிடலுடைய வெந்தாய்குறச்சிறுமி, புனமணியினிணைமுலை யணைந்தேகளிக்குமுயர்-புயவீரா - புனிதநவநிதிகனக விண்டாமெனத்திகழு, மெழுநகரவணிகர்நிதம் வந்தேதுதிக்கவளர், புனல்வரையையினிதுளமு வந்தாதரித்துலவு-முருகோனே. ௧.

அருக்கனிந்திர திசையினின்மரகத, நிறத்தரும்பரிகுலவுமிரதமிசை, யடுத்துவந்திட வமளியினெழுமியல் -புடையோரா-யதிர்த்தெழுந்திரை நதியினின்முழுகிமு, மலத்தை வென்றுந னெறியொடுபரகதி, யளிக்கும்வெண்பொடி யரனருள்விழிமணி-புனைவோரா-யிருக்குவின்பய னெனுமுனைவழிபட, மருக்கொழுந்தொடு தளவநன்மலர்பல வெடுத்துவந்திணையடிதொழுமடியவர்-தமதாளா-யிசைத்திடும்பணி புரிவது பொருளென, நினைத்திடும்படி யொருவரமருளுதி, யிமைப்பிலண்டர்கள் சிறையொடுகுறைதெற-வெறிவேலோய்-பெருத்ததண்புன லெதிர்வரவரனருள், பதித்ததென்றமி ழெழுதிய பனைமடல், பிழைப்பிலன்பொடு விடவருமொருசிர-புரநாதா பிணைத்தடங்கரு விழியமுதறம்மொழி, வரைக்கிநண்பென வளரிருகுடமுலை, பிடிக்கிணங்கிய மடநடைநவிமகண்-மணவாளா-மருத்துவின்சுத னெனுமடலனுமனை, விடுத்திலங்கையி லெரியிடுவெனசமென், மலர்க்கணன்சுரி வளைசெறிகரன் மகிழ்-மருகோனே-மனத்துகந்தெழு நகரவணிகர்தொழ, வளத்தின்மிஞ்சிவி ணகடுறவளர்புனல், வரைக்கணின்புடன் மருவியவறுமுக-முருகோனே. ௨.

நிசியைநிகர்குழல், கனகவடவரை, நிகருமிளமுலை-மடமானர்-நெடிதுபயிலசு, மருவியெனதுயிர், நிலையில்வரவருள், புரியீரேல்- வசையுமுமதறு, பழியும்வருமென, வறியபல மொழி-பகராதே-மறைகளுணர்வரு, முனதுதிருவடி, மலரையனுதின-மடைவேனோ-தசைகுருதிநிண, மொழுகியவுணர்கடலைகண்முடியொடு-தரைமீதே-சரியவடர்சமர், முனையிலயி

Koviloor Digital Library

லெறி, தருகுமரகுரு-பரநாதா-வசாசாமுழு,துதவுமுமையவ ளருளுமறுமுக-முடையோனே-யமரர்முதலடி, யவர்கள்வழி படு, மணிகொள்புனல்வரை-முருகோனே. ௩.

நஞ்செனப்பொலி வரிவிழிகடலமு, துங்கசப்பெனு மழ மொழிமடவெகி, னங்கள்பெட்புறு தளர்நடைகுவிமுலை-மட வாரே-நந்தமக்குயி ரலதொருபொருளிலை, யென்றுகைப்பொ ருண் முழுவதுமவர்கொள, நன்களித்தவர் பணிவிடைபுரிவது கடனுய்மோ-கஞ்செனித்திட நயமொழிபலசொலி, யம்புயத் துணை மலரடிவருடுதல், கண்டெனைப்பல ரறிவிலியிவனென விகழாதே-கந்தடர்த்தெழு கரியொடுமரிபயில், சந்தவெற்பு றைகுறுமுனிபரவிய, கங்களித்தருள் பெறுதிருவடிதொழ, வருள்வாயே-அஞ்சனக்கிரி யனையமதகரிபி, ளந்துரித்தணியு டையினரரியபொ. னம்பலத்தரு ணடமிடுபவர்வட-வனல் போலா-மங்கிமுப்புர மெரிபடவுதவிய, செஞ்சடைத்தனி முதல்வனதுயிர்புரை, யம்பிகைக்கிரு விழிமணியெனவரு மொருசேயே-மஞ்சுடற்கொடு நிசிசாரிறைமக, னஞ்சவெம் புறம் தனுவளைரகுபதி, வம்பலர்க்கிறை மகிழ்வொடுவழிபடு மிருபாதா-வண்டொலித்திசை பயில்பலபொழில்புடை, கொ ண்டுவிட்புல நெறிமறைவுறவளர், வண்புனற்கிரிமருவியகுரு பா-முருகோனே. ௪.

நிகரின்மதனைந்து, மலர்விசிகம்வந்து, நிலைகளரவங்க, முறலாலே-நிதமுளமலைந்து, நெறியலபுரிந்து, நெடுநிதிமுகந் து-மடவார்பா- தகமலமடைந்து, சரணெனவிழுந்து, தருசி றியவின்ப -நுகராதே- தவர்கள்பலர்சிந்தை, மகிழ்வொடுவ ணங்கு, சரணகமலங்கள்-பெறுவேனோ-வகலிருவிசும்பி லு றைபரிதியிந்தொ, டழலையுறுசெங்க-ணெனமேவா-டரவிதழி கங்கை, நதியறுகுதும்பை, யணிசடிலசம்பு-தருபாலா-புகலி யுமைசெம்பொன், முலையமுதமுண்டு, புலமையினிறைந்த, கவிவாணு-புணரியுடைகொண்ட, புவிதொழவளர்ந்த, புனல் வரையுகந்த, முருகோனே. ௫.

அற்றிரணிகரள, கத்தினில்வரிவிழி, யப்பினின்மணி வட-முலையாமீ-ரத்தியில்வளைதனு, விற்பொலிநுதலின, யச் சுகமொழியினின்-மருள்வோனுய்-மற்றவரொடுசய, னித்தித

3238
Koviloor Digital Library

ழுமுதுளம், வைத்தருளுதிரென-வுரையாதே-மட்டவிழ்மலர் கொடு, நித்தநினடிபா. வத்திருவருளினி- தடைவேனோ-நற்ற வர்கலைபல, கற்றுணர்பவர்பொறை. நற்குணமுடையவ-ருள மேவா-நச்சியபொருடரும், வித்தகவளையொடு, நத்தணிகரு- முகின் மருகோனே- வெற்றியிலுயரயி, லைக்கிரிபொடிபட, விட்டிடுமறுமுக-முடையோனே- மெய்த்திருநிதிவணி, கர்க் கருள்புரிபுனல், வெற்பினிலுறைதரு-முருகோனே. சு.

பூமகளின்மிஞ்சு, காமரெழிறங்கு, பூவையர்செய்வஞ்ச மயலாலே- பூசைதவமன்பொ, டீகையுமறந்து, போகவிட முண்டு-திரிதீதார்-காமியிவனென்று, நீவிடின்முரண்கொள், காரெனமுழங்கி-நமனுரே-காய்சினமடங்கல், போலெனெநெ ருங்கு, காலையெவர்வந்து-துணையாவார்-காமனைமுனிந்த, நா தனருண்மைந்த, கானவர்மடந்தை -மணவாளா-கார்வரைபி ளந்து, சூருடறடிந்து, காசறவிளங்கு-வடிவேலா-நேமிவளை தண்டு, வாள்சிலையிலங்கு, நீலமுகில்சொந்த-மருகோனே- நேரிலமுதுண்டு, வாழ்சுரர்தொழுந்த. ணீர்மலையுகந்த-முரு கோனே. எ.

திகழ்மனையிருந்துதெரு, வினில்வருவரின்சொலொடு, சிறுநகைபுரிந்திடுவர் -மணிபோலே- சிலைமதனனம்பின்விழி, வலைவிசிறிமைந்தருயிர், சிறையிடுவர்சொந்தமனை-கொடுபோ வா-ரகமகிழ்வடைந்துசில, நயமொழிபுகன்றுநுமை, யனைய ருலகெங்குமிலை -யெனவோதா- வரியபொருள்கொண்டுபினர், வறியரிவரென்றுதளு, மரிவையர்கடங்களுட -னுறவாமோ- மகபதிமணங்குலவு, தருநிழலிருந்தரசின், வளமுறநிணங்கம ழும்-வடிவேல்சூர்- மாபொடுமுடிந்தவிய, விடுகுமாகந்தகுக, மருவிரிகடம்புபுனை-புயவேளே-புகழ்மதுரையம்பதியி, லம ணர்குழுவஞ்சமிகு, புனலெதிர்செலுந்தமிழி-னுரவோனே- புதுமலர்நிறைந்தபொழில், புடையுறநிமிர்ந்துவளர், புனல் வரையுகந்தருள்செய்-முருகோனே. அ.

மனைவாழ்வுமக்க, ளூறவோருத்தம், வளநாடுநச்சி- யலைவேனோ-மதிமாமுகத்த, ரிவைமார்மயற்குண், மதனுல் வருத்த-முறுவேனோ-வெனையாதரித்து, வினைவேறுக்க, வி துபோதெனச்சொ, லியும்வாரா, யிமையாசலத்து, மடமான

Koviloor Digital Library

ளித்த, விளையாயுனக்கு-முறைதானோ- வனகாமதத்த, வயி
ராவதத்தை, யமரேசனுப்த்து -நெடுவானு -டாசாளவைத்த,
குமராவழுத்து, மடியார்கருத்தி-லுறைவோனே-புனம்வாழ்
குறத்தி, தனமார்புயத்த, புவியூணிமெய்த்த -மருகோனே-
பொருசூரடர்த்த ,வடிவேலெடுத்த, புனன்மால்வரைக்குண்-
முருகோனே. கூ.

மருவிரிமைமுகிலளக, முடிபதியையிசழ்வதனம், வளை
தனுவைநிகருநுதன் -மடமானேர்-வரிவிழிமென்மலரடிபொ
ன்,மலையனையகுட முலைமின்,வடிவைநிகர்கொடியிடைகொண்,
மடவாரோ- டருகணுகியுமதத்ர, வமுதருளிலெனதுயிரொர,
டளவினிதிதருவனென -வுரையாதே-யருமறைகளுணர்வரிய
திருவடிகடொழும்விரத, மதைமருவுமடியரவை- பெறுவே
னோ-தருமதுரகவிபுகலு, மருணகிரிமுதலடியர், தமைமகிழு
மறுமுகவ-மலர்மேல்வே-தனையுமொருபொருள்வினவி,நிகள
மிருகழலிலிடு. சதுரசரவணகுமர-குருநாதா-பொருகடலுமசு
ரர்களு, நெடுவரையுமுடியவுயர், புலவர்சிறைதவிரவெறி-
வடிவேலா- பொதுவியர்கடயிறிருடி, யளையயிலுமரிமருக,
புனல்வரையிலினிதுலவு-முருகோனே. ௰.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டவெண்சங்கு கட்கங்கதாயுதந் திகிரிகோ
தண்டமேந்துஞ், செங்கைப்பசுந்துழாய்க் கருமுகிலுமரும
லர்ச்செம்மலுந்தேவர்கோவும்,பேர்கொண்டதிண்டிறற்சூர்ப்
பகைஞனல்வரு பெரும்பயந்தெளியவழியிற், பேதித்தகிர
வுஞ்சகிரிபொடிபடச்சிறைப் பிணியகன்றமருய்யப், போர்
கொண்டதானவச்சேனுசமுத்திரம்பொள்ளெனவறப்பவிண்
டோய், பொருவில்சூர்மாபுமிரு கூறுகநான்மறைப் புண்ணி
யர்செய்வேள்விபொலியக், கூர்கொண்டவாகை வடிவேல்
கொண்டசேவகா கோலப்பிணுங்கிலென்றுங், குலவணிகரினி
துதொழ நிலவுபுனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே.

Koviloor Digital Library

அண்டர்க்குறுந்துயரகற்றநீடாழியிலழன்றுருத்தார்த் தெழுந்த, வாலகாலத்தையமுதாக்கொண்டுகண்டத் தடக்கு மபிராமிகேள்வன், கண்டற்புதங்கொண்ட கங்களிதுளும்ப வோர் காதிடைப்பிரணவத்தின், காரணப்பொருள்சொன் மெஞ்ஞானகுருநாதனே காங்கையாகார்த்திகேயா, தொண் டர்க்கிரங்கிமும் மலவிருளகற்றிநற் சுகவாரிமூழ்குவிக்குஞ், சுத்தபரிபூரண நாயினேனின்னடித் தொண்டனுநாளுமுள தோ, சொண்டற்குழற்குறக் கொடிமகிழுமணவாள கோலப் பிணங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நிலவுபுனல்வ ரையில்வளர் குமரகுருபரமுருகனே. உ.

வென்றிவடிவாளைக் கடிந்துமுனைவேலையும் வெகுண் டழற்கணையைநூறி, மீறிவருமாலகாலத்தைச்சினந்து திரை வேலைபயமாகநோக்கித், தென்றிசைச்சண்டனுக்குங் கொலை பயிற்றியஞ் சேலைவனமோட்டிநிண்ட, செய்யமானேக்கு டைத்தையலார்மையலிற் சிக்கித்திரிந்துழன்று, கன்றிமன தங்கமு மெலிந்துமுதியோர்வைத் தகைப்பொருளெலாமிழந் து, காலங்கழிப்பவர்ச்சேராது நின்னருள் கலக்குநெறியென் றுதருவாய், குன்றிணைக்கொங்கைக் குறச்சிறுமிமணவாள கோலப்பிணங்கிலென்றுங் , குலவணிகரினிதுதொழ நிலவு புனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. ங.

நறையார்பசுந்துழா யங்கைத்தலத்திகிரி நாரணன்பத மும்வனச, நாண்மலர்ச்சேக்கையுறை நான்முகன்பதமுமுட னுட்டத்தன்வாழ்வும்வைய, முறையேபுரிந்தரசியற்றிக்களிக் குமணி முடிமன்னர்வாழ்வும்வேண்டேன், முற்றத்துறந்து னைப் பற்றித்தொடர்ந்துபர முத்தியைவிரும்பிநின்று, நிறை மாதவஞ்செய் மெய்யன்பினர்க்காளாகி நின்னடிவணங்குநெறி யி,னிலையளித்தாளென்றி யான்புகலவுங்கருணை நீசெயாதென் னமுறையோ, குறையாதநவநிதிக் கோனுெத்தசெல்வர்வளர் கோலப்பிணங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நிலவு புனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. ச.

கங்கையணிசங்கரன் கயிலைமால்வரைவருங் காட்சியிற் பழுதில்கதிர்கால், கணமணிகுயிற்றியொளிர் பொற்சிகர மேற்றிவெண் கலைமதிக்கிரணமொப்பத், துங்கமிகுமிரசிதங்

Koviloor Digital Library

கொண்டமைத்தைங்கதித் தூகதம்பலபிணித்துத், தூமறு குலாவுமிரதத்தினிடைமெய்யன்பர் தோத்திரஞ்செய்து சூழ, மங்கலப்பெருமுரசதிர்ப்பவிண்ணவர்கள்பூ மழைபொழிய மாசில்பனவர், மறைபாடமடமாதர் நடமாடநீபவுனி வருமகி மைகாணவருள்வாய், சொங்குலவுசந்தனப் பொங்கர்செழு மங்குல்படி கோலப்பினாங்கிலென்றுங், குலவணிகரினிது தொழநிலவுபுனல்வரையிலவளர்குமரகுருபரமுருகனே. ரு.

அருணன்குணக்கெழுமு னமளியினெழுந்துநீ ராடி வெண்ணீறுபூசி, யக்கமணியங்கமிக் கழகுறவணிந்துநின் னா றெழுத்துச்சரித்துத், திருமறைவிதிப்படி நினாலயஞ்சூழ்ந் திருகை சென்னியிற்கூப்பிநின்று, தேவசேனாபதே சேவலங் கொடியனே தெய்வகுஞ்சரிமணாளா, பொருவின்மெய்த்தொ ண்டரமை யந்தெரிந்தருண்மாரி பொழிகின்றகருணைமுகிலே, புள்ளிமயில்வாகனா வென்றுதுதிபேசுநெறி புன்மையேற் கென்றுவருமோ. குருமணிகொழிக்குந் திரைக்கருங்கடல் சுலவு கோலப்பினாங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நிலவுபுனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. சு.

தொடிமலர்க்காந்தளங் கைப்பவளவாயர்பலர் சோப னம்பாடமறையோர், துய்யவாயாசிசொல நாவலர்கள்பாட வண்டூரியங்காரினதிர, முடியரசர்திறைகொண்டு கடைவாயி னிற்கவெண் முழுமதிக்குடைநிழற்ற, முடங்குளையரித்தவி சிருந்து செங்கோலைமனுமுறை வழுக்காமலோச்சிப், படிமு ழுதுமாள்கின்ற பார்த்திபரெனினுநின் பணிசெயாராயின்மி டியாற், பலவளமிழந்துபவி யேற்றுண்டுழன்றுவெம் பாழ் நரகிலாழ்தல்சரதங், கொடியுலவுமணிமாட முடிககனமுகட ளவு கோலப்பினாங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நில வுபுனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. எ.

புரையகலிருந்தவக் கோலம்புனைந்துநீள் பொற்றைப் பெரும்புழைக்குட், புக்கிருந்துதிர்சருகு புனல்காலருந்தி யைம் புலன்வழியுளஞ்செலுத்தா, துயையுணர்விறந்திரு கண் மூடித்தவம்பல யுகம்புரிந்திடுவரேனு, முன்னடிதுதித்திடா ரென்னினவரொருபயனு முற்றிடாரென்றுதென்பால், வரை யிலுறைகும்ப னக்கீரன்முதலோர்கணினை வந்தித்துவாழ்வு

Koviloor Digital Library

பெற்றூர், வம்பனேனன்பினெடு நின்புகழ்வழுத்தாது வாணு ளொழித்தன்றுறையோ, குரைகடல்வறப்பவடி வேலெறட்ட சேவகா கோலப்பிணங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நிலவுபுனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. அ.

நந்தாதநான்மறைப் பொருண்முடிவிலோவலது ஞானத்தினுச்சிதனிலோ, நற்புராணுகமந்தன்னிலோ பொற்புடையநங்கையுமைகைத்தலத்தோ, சிந்தாதபேரெழில் கொளாரன்மடவாரறுவர் செங்கைத்தலத்தின்மீதோ, சிந்திக்குமெய்யன்பருள்ளத்திலோ வள்ளிதெய்வானை பாகத்திலோ, கந்தார்களிற்றுரிக் கண்ணுதல்புயத்திலோ சுசடறக்கற்றுணர்ந்த, கவிவாணர்சொல்லிலோ நீயிருந்தருள்செய்வைகடையனேற்குளவுபுகலாய், கொந்தார்கடம்பணி புயாசலக்கடவுளே கோலப்பிணங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நிலவுபுனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. கூ.

கஞ்சமலர்நிகர்வதன மோராறுமீராறு கண்களுங்கற்பகப்பூங், காவையிகழ்கைகளீராறுமோராறு பைங்கனகமணிமுடிகளுங்கார், மஞ்சமரும்விந்தா சலத்தைப்பழித்தவிறல் வாகுவீராறுமசுரர், வாணுளொழித்தகூர் வடிவேலுமெம்மனோர் வாழவருள்பதயுகளமும், பஞ்சனையமெல்லடிப் பைந்தொடிப்பவளவாய்ப் பாவைமார்பயிலிரண்டு, பக்கமுங்கண்டியா னென்றுதெரிசித்துனைப் பாடியருள்பெற்றுய்வனே, குஞ்சரிமணாளனே கோபாலன்மருகனே கோலப்பிணங்கிலென்றுங், குலவணிகரினிதுதொழ நிலவுபுனல்வரையில்வளர் குமரகுருபரமுருகனே. ய.

ஊஞ்சல்.

சீருலவுதனிவயிரக் கால்கணாட்டிச்
செம்பவளவிட்டமதிற் சிறக்கப்பூட்டிப்
பேருலவுமிரத்தினப்பொற் பலகைசேர்த்துப்
பிறங்குமணித்தாளவடம் பின்னியார்த்துக்
காருலவுதாளகக் கௌரிசெம்பொற்

Koviloor Digital Library

காந்தண்மலர்க்கைகளினுற் களிப்புற்றுட்டத்
தாருலவுகடம்பணி வேளாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ௧.

அங்கனகமணிமுடிகளாறுமாட
வாறிரண்டுகுழையாட வயில்வேலாடத்
திங்கணிகர்முகமாறு மாடவாடாச்
செங்கமலமலர்ப்பதங்கள் சிலம்போடாடத்
துங்கமிகுமிமையவர் சூர்ப்பகையால்வந்த
துயரகன்றேமெனக்களித்துத் துள்ளியாடச்
சங்கரிதன்மருமகனு ராடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ௨.

இந்திரன்மாலயன்முதலோர் வலத்தோளாட
வெல்லையிலாச்சூர்ப்படைகட் கிடத்தோளாடச்
சுந்தரப்பொன்வடகுவடு தூளங்கியாடத்
தொல்லைமகத்தீவலமாய்ச் சுற்றியாட
வந்திமதிநதியிதழி யலங்கல்வேணி
யண்ணலார்பெருமகிட்சி யகங்கொண்டாடத்
தந்திமுகன்றனித்துணைவா வாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ௩.

பத்தியொடுபழவடியார் பணிந்துபாடப்
பாவையர்கள்பலலாண்டு பாடியாடச்
சித்திரத்தண்டமிழ்விரகர் புகழ்கொண்டாடத்
தெய்வமறைமுழங்கவியஞ் செயவென்றூர்ப்ப
வத்திதருமழலவிடங்கண் டிரியுந்தேவர்க்
கஞ்சலளித்தயின்றபிரா னமர்மெஞ்ஞானச்
சத்திதருதிருமகனு ராடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ௪.

ஐவகையாம்பூதவடி வாகிநின்ற
வற்புதமேமெய்ப்பொருளே யடைந்தார்க்கென்றுங்
கைவருமாமலகமெனக் கருத்திற்றேன்றிக்
காட்சிதருமுழுமுதலே கனிந்தபாகே

Koviloor Digital Library

தெய்வமறைத்தனிப்பொருளே யமாருய்யச்
சேணடுகாத்தருளுந் தேவதேவே
சைவசமயக்கொழுந்தே யாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ரு.

வண்டமர்பூம்பொழின்மதுரை வாழும்பாண்டி
மாதேவியார்வேண்ட வழுதிவெப்பம்
வெண்டிருநீற்றுற்றணித்துச் சமயத்துண்மை
வெங்கனலினெடும்புனலில் விளங்கக்காட்டிக்
குண்டரெனுமமணரைக் கூர்ங்கழுவிலேற்றிக்
கூனகற்றிமாறனையாட் கொண்டகாழித்
தண்டமிழுக்கொருதலை வாவாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். சு.

நீடுதிருப்பரங்கிரியுந் திருச்செந்தூரு
நிகரிலாவினன்குடியு மேசவன்பர்
கூடுதிருவேரகமும் வரைகளியாவுங்
குலவுபழமுதிர்சோலைக் குன்றுநீங்கா
தாடுமயில்வாகனத்தா யவுணர்வாழ்வு
மலைகடலுந்தடவரையு மழியச்சீறிச்
சாடுமயிற்கரதலத்தா யாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். எ.

மன்னுமறைப்பொருண்முடிவி லிருக்குமாபோல்
வணிகர்குழாமிக்கமன மகிட்சியோடு
மின்னுமணிப்பொற்றாபி யமைத்துச்செய்த
வெள்ளிரதமதையுகந்து மேவாநின்ற
பன்னிருகைப்பெருந்தகையே யிமையாநாட்டப்
பண்ணவருமண்ணவரும் பரவியேத்துந்
தன்னிகரில்பரம்பொருளே யாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல. அ.

வருமகரமதிப்பூசத் திருவிழாவில்
வானமுதுங்கைப்பவுறு மனிதரியார்க்குந்
திருவமுதுசமைத்தருத்தி முகமன்கூறிச்
சிந்திக்கும்வணிகர்குழாஞ் சிறப்புற்றோங்கக்

Koviloor Digital Library

கருணைபுரிந்தறமுதனான் கின்பநல்கிக்
காத்தருள்செய்மான்மருகா கங்கைமாது
தருமரியதிருக்குமரா வாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ௯.

புண்ணியவெண்ணீறுங் கண்மணியும்வாழப்
புகழிருக்குமாகமமும் பொலிந்துவாழக்
கண்ணியவர்க்காக்கு மெழுத்தைந்தும்வாழக்
கரையினிதிவணிகர்குழாங் கலந்துவாழ
வெண்ணியமெய்யடித் தொண்டரென்றும்வாழ
விந்நகரோடெந்நகரு மினிதுவாழத்
தண்ணியநின்னருள்வாழ வாடீரூஞ்சல்
தண்ணீர்மாமலைக்கரசே யாடீரூஞ்சல். ௰.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பொன்னுலகங்குடியேற்றும் பொருட்டாகவரனுதற்கட் புலிங்கமாகித், துன்னுதிரைநதியிடைவந் தறுமுகத்தோடோருருவாய்த் தோற்றஞ்செய்து, கொன்னுதிவேற்படைவாங்கி யவுணர்குலமறக்களைந்த குமரவேளை, மன்னுமறைப்பொருண்முடிவைத் தண்ணீர்மாமலைக்குகனை வணக்கஞ்செய்வாம் ௧.

பொங்குமலவிருளோட்டிப் பூரணப்பேரொளிகாட்டிப் புன்மையேனைக், கங்குல்பகலற்றதனியிடத்திருத்திக் கருணைபுரிகந்தவேளைச், செங்குமுதத்திருமலர்வாய்த் தெய்வானைநாயகனைத்தேவதேவை, மங்குல்படிபொழில்புடைசூழ் தண்ணீர்மாமலைக்குகனை வணக்கஞ்செப்வாம். ௨.

குன்றாதபெருந்திருவுங்குறையாதவாணாளுங்குறிப்பிற் கண்டு, தன்றாளினிணைபரவுமடியர்குழா மினிதுபெறத்தந்தாள்வோனை, யன்றாலமுருத்தெழக்கண்டச்சமுறு மிமையவர்தமாவிகாத்த, மன்றாடிதிருமகனைத்தண்ணீர் மாமலைக்குகனை வணக்கஞ்செய்வாம். ௩.

Koviloor Digital Library

ஆரணத்தினரும்பொருளு மாகமத்தின்பகுப்புமுணர்ந் தடங்கிச்செய்யும், பூரணமெய்த்தவர்க்கலது புறச்சமயநெறி புகுதும் புன்மையோர்க்கு, காரணற்கும்வாசவற்கு நான்மு கற்குமுணர்வரியநாதன்றனை வாரணத்தானனன்றுணையைத் தண்ணீர் மாமலைக்குகனைவணக்கஞ்செய்வாம். ச.

காய்ந்துலர்ந்தவெள்ளென்பைப் பெண்ணாக்கிமருகவி லோர்கன்னிக்காகத், தோய்ந்தவிடந்தனையகற்றி யாண்பனை பெண்பனையாக்கித் தொன்னூன்முற்று, மாய்ந்துணர்ந்தோ ருளத்திருக் குமாரமுதைதவெற்புருவவந்நாளோச்சும், வாய்ந் தவடிவேற்கானைத் தண்ணீர்மாமலைக்குகனை வணக்கஞ்செய் வாம். ரு.

கள்ளிணர்ப்பூந்தருக்காவன் மகபதியேமுதலமரர்சாதல் கூரும், வெள்ளிரதமதிலணிகர்புடைசூழத் தைப்பூசவிழாக் கொண்டானைத் தெள்ளிமதுக்கலந்துதவுந்தினைமாவை மகிழ் ந்தேற்றுத்தெவிட்டவுண்டு, வள்ளிதனைமணம்புணர்ந்த தண் ணீர்மாமலைக்குகனை வணக்கஞ்செய்வாம். சு.

கருப்பையிலுற்றவதரித்துக் கன்னியர்கள்கொடுங்காமக் கடற்குண்மூழ்கி, யுருப்படிவமிகமெலியுங் கடையனையுமொ ருபொருளாயுள்ளங்கொண்டு, திருப்பதத்தினீழலின்கணிருத் தியருள்சுரந்தளிக்குஞ்சேவலோனை, மருப்படியுமலர்ப்பொ ழில்சூழ் தண்ணீர்மாமலைக்குகனை வணக்கஞ்செய்வாம். எ.

காணுறுமலர்க்கடப்பந் தாரணிகிண்புயவேலைக்கருது மன்பர்க், காணதபெருவாழ்வுமறமுதனுன் கின்பமுந்தந்தாட் கொள்வானைப், பாணுறுமொழிக்கௌரி பங்காளற்குபதே சம்பகருங்கோவை, வானுடர்க்காருயிரைத் தண்ணீர்மாமலைக குகனைவணக்கஞ்செய்வாம், அ.

பொல்லாதேனருயிரைப் பொய்யுரையார்நெஞ்சகத்துட் பொருந்திவாழு, நல்லானைத்தேவர்தொழுநாயகனைச் சீர்காழி நகர்வந்தானைக் கொல்லாதவிரதியர்தங்கூற்றவனைச் சைவநிலை கொளச்செய்தானை, மல்லார்பன்னிருபுயனைத் தண்ணீர்மா மலைக்குகனைவணக்கஞ்செய்வாம். கூ.

Koviloor Digital Library

நந்தாதசொற்பொருளின்சுவை சிறிதருணராதநாயேன் புன்சொல், செந்தாமமெனப்பனிருபுயத்தணிந்து நலங்குலவு சிறப்பெஞ்ஞான்றுந், தந்தானையறப்பலவுட களிப்பினொடு புரிவணிகர்தம்மையிங்கு. வந்தாளுமுழுமுதலைத் தண்ணீர் மாமலைக்குகனைவணக்கஞ்செய்வாம். ௰.

மேற்படி வேறு.

திருவருளடைந்துநின்பொற் சினகரம்புகுந்துநாயே
னிருபதவனசமபோற்றி யிருக்குநாளெந்தநாளோ
வருமறைப்பொருளைக்கங்கை யாறணிசடையார்க்கீந்த
மருமலர்ப்பொழில்சூழ்தண்ணீர் மாமலைவடிவேலோனே. க.

வெஞ்சினந்தொலைத்துவான மின்னனார்செய்யுமாய
வஞ்சனையகற்றியின்ப வாழ்வடைந்திருப்பதென்றோ
கஞ்சனைமுனிந்தகஞ்சக் கண்ணனார்மருகாகால
மஞ்சினமபடியுந்தண்ணீர் மாமலைவடிவேலோனே. உ.

பணிகளிற்பொருளிற்பாரிற் பாவையரிடத்திற்பல்வே
றணிகளிற்பிறிதின்மேவு மார்வமெனறகற்றியாள்வாய்
தணிவிலபன்னிதிகளாலத் தனதனைத்தாழ்த்தியோங்கும்
வணிகர்கள்பரவுந்தண்ணீர் மாமலைவடிவேலோனே. ௩.

வெள்ளைவாரணத்தின்மேவும் விண்ணவர்க்கிறைவன்வேத
னெள்ளியதிகிரிச்செங்கை யுவணகேதனத்தான்போற்றப்
புள்ளிமாமயின்மீதேறும புண்ணியாபுரப்பதென்றோ
வள்ளிநாயகனேதண்ணீர் மாமலைவடிவேலோனே. ௪.

கண்டினைப்பழித்ததீஞ்சொற் கன்னியர்காமக்கள்ளை
யுண்டுணர்வுகுத்துவீணா ளொழித்திடாதுனது பைம்பொற்
புண்டரீகத்தாளெண்ணிப்பூசனைபுரிவதென்றோ
மண்டலமதிக்குந்தண்ணீர் மாமலைவடிவேலோனே. ௫.

Koviloor Digital Library

தானவர்த்தொலைத்துத்தேவர் தம்பிரானாகியன்பர்க்
கானபேறுதவியுள்ளத் தவாவெலாமளித்துக்காக்கு
ஞானநாயகனேதெய்வ நாயகிகணவாநாளும்
வானவர்பரவுந்தண்ணீர் மாமலைவடிவேலோனே. ௬.

நாரணன்போதின்மேய நான்முகன்றேடிக்காணா
வாரணத்துருவாய்த்தோன்று மைம்முகத்தமலனீந்த
காரணப்பொருளேயென்னைக் காப்பதுன்கடனாங்கண்டாய்
வாரணக்கொடியாய்தண்ணீர் மாமலைவடிவேலோனே. ௭.

வேலைசூழுலகவாழ்வே மெய்யெனக்கருதிவீணே
சாலநாட்கழித்துமேலைத் தவத்தினாலின்றுவந்துன்
பாலடைக்கலமாய்ச்சேர்ந்தேன் பாதுகாத்தருள்வாய்வாச
மாலையங்கடம்பாதண்ணீர் மாமலைவடிவேலோனே. ௮.

தீதுறுகொலைகட்காமஞ் செய்வதிற்சிறிதுமஞ்சாப்
பாதகனிவனென்றெண்ணிப் பராமுகஞ்செய்வாயாகி
லேதிலார்போலநாலே ழெனுநரகடைவேன்சைய
மாதுமைசுதனேதண்ணீர் மாமலைவடிவேலோனே. ௯.

பூவும்வானுலகும்வாழப் புண்ணியமறைகள்வாழச்
சேவல்பைந்தோகைவள்ளி தெய்வநாயகியும்வாழ
யாவையும்வாழயானின் னடிநிழலடைந்துவாழ
மாவினையடர்த்ததண்ணீர் மாமலைவடிவேலோனே. ௰.

வெண்பா,

பூமேவுவேதன்புரந்தரன்மால்போற்றிசைக்கு
மாமேவுதண்ணீர்மலைக்குகனை—நீமேவிச்
சிந்திக்கினெஞ்சேசிறப்புவருஞ்சேவடியை
வந்திக்கினெல்லாம்வரும். ௧.

விண்ணவர்தம்வெஞ்சிறையைமீட் டானைவேலெடுத்த
பண்ணவனைத்தண்ணீர்ப்பருப்பதத்தி—னண்ணிவளர்
செவ்வேளைக்கண்டோர்வெண் டிங்கட்குடைநிழற்று
மைவேள்பகையகற்றுவார். ௨.

மான்மருகாதண்ணீர்மலைக்காசேமாவடர்த்த
வேன்மருவுபன்னிருகைவித்தகா—தேன்மருவு
பைந்தாமப்பூங்கடம்பாபாவியேற்கின்றருள்செய்
கந்தாகுகாசண்முகா. ௩.

கார்த்திகைநாளன்றுசென்றுகண்டுதெரிசித்தவரைப்
போர்த்தவினைமுழுதும்போக்குமே—சீர்த்தியுடைப்
பண்ணீர்மழலைமொழிப்பைந்தொடியார்பங்கிலுறை
தண்ணீர்மலைக்குகன்பொற்றாள். ௪.

தீதகற்றியின்பத்திருவருளிற்சேர்ந்திடநீ
யாதரிக்கினெஞ்சேயறுமுகனைச்—சீதமலர்க்
கொன்றைச்சடையான்குருவேபுனல்வரையா
யென்றெப்பொழுதுநினையே. ௫.

பூசையிலேன்சற்றும்பொறுமையிலேன்பொன்னடிபோற்
றாசையிலேனீகையறமில்லேன்—றேசயிலார்
வள்ளலேதண்ணீர்மலைவாழ்பெருங்கருணை
வெள்ளமேயெவ்வகையுய்வேன். ௬.

கொல்லாவிரதநெறிகொண்டார்க்கெளிதருள
வல்லானைத்தண்ணீர்மலைக்குகனை—யல்லாதார்க்
கெட்டானைச்சூர்மாவிருகூறதாகவயி
றொட்டானைநெஞ்சேதுதி. ௭.

காழிநகரிற்கவுரிமுலைப்பாலருந்தி
வீழியிற்பொற்காசுபெற்றவித்தகா—வாழியரி
பூவேதன்போற்றுபுனல்வரையாய்புன்மையினேன்
மாவேதனையகற்றுவாய். ௮.

Koviloor Digital Library

பூசத்திருநாளிற் போற்றுமடியார்பவநோய்
நாசப்படுத்துபுனனுகத்தாய்--நேசமிகு
கந்தாகடம்பாகதிர்வேலாகங்கைபெற்ற
மைந்தாவெனைப்புரக்கவா. ௬.

தண்டாயுதம்பிடித்ததண்ணீர்மலைக்கரசே
திண்டோளீராறுடையசெவ்வேளே—தொண்டரொடு
பார்வாழவிந்தப்பதிவாழப்பாவாழச்
சீர்வாழநீகருணைசெய். ௰.

முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேசிகன் றிருவடிவாழ்க.

